கிறிஸ்துவில்

எனக்கு உறுதி இருக்கின்றது

கிறிஸ்து இயேசுவில், நான் என்றென்றும்
ஆக்கினைத்தீர்ப்புக்கு விடுதலை
ஆக்கபட்டிருக்கிறேன்.[1]

தேவனிடத்தில் அன்பு கூர்ந்து, அவருடைய
தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு
சகலமும் நன்மையாக நடக்கிறதென்று
அறிந்திருக்கிறேன்.[2]

நான் எல்லா குற்றம் சுமத்துதலுக்கும்
நீங்களாக்கப்பட்டிருக்கிறேன்.[3]

நான் கிறிஸ்துவின் அன்பில் இருந்து
பிரிக்கப்பட முடியாது.[4]

நான் கிறிஸ்துவில் நிலையாய் நிற்கிறேன்.
அவர் என்னை அபிஷேகித்து, தம் உரிமையின்
முத்திரையை என் மீது போட்டு, வரப்போகும்
யாவற்றிற்கும் அச்சாரமாக தம்முடைய
ஆவியானவரை என் இருதயத்தில் வைத்தார்.[5]

நான் கிறிஸ்துவுடன் கூட தேவனுக்குள்
மறைக்கப்பட்டிருக்கிறேன்.[6]
தேவன் தம்முடைய நற்கிரியையை என்னில்
நிறைவேற்றுவார் என்று அறிந்திருக்கிறேன்.[7]
நான் பரலோகத்தின் குடிமகன்.[8]

எனக்குள் பயமுள்ள ஆவி இல்லை;
பெலமும், அன்பும், தெளிந்த புத்தியுள்ள
ஆவியே எனக்குள் இருக்கிறது.9

நான் இரக்கத்தை பெற்று, ஏற்ற வேளையில்
சகாயம் செய்யும் கிருபையை அடையமுடியும்.[10]

நான் தேவனால் பிறந்திருக்கிறேன்,
பொல்லாங்கன் எனக்கு தீங்கு செய்ய முடியாது.[11]

[1] ரோமர் 8:1,2
[2] ரோமர் 8:28
[3] ரோமர் 8:31-34
[4] ரோமர் 8:35-39
[5] 2 கொரி. 1:21, 22
[6] கொலோ. 3:3
[7] பிலி. 1:6
[8] பிலி. 3:20
[9] 2 தீமோ. 1:7
[10] எபி. 4:16
[11] 1 யோவான் 5:18

ரோமர் 8:1,2
ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

ரோமர் 8:28
அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

ரோமர் 8:31–34
இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.

ரோமர் 8:35–39
உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

2 கொரிந்தியர் 1:21,22
உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம்பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்.

கொலோசெயர் 3:3
ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

பிலிப்பியர் 1:6
நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

பிலிப்பியர் 3:20
நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

2 தீமோத்தேயு 1:7
தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

எபிரேயர் 4:16
ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

1 யோவான் 5:18
தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au